Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ்
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 265 | உள்ளூர் - 23.09.2026 | புதன்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 265 | வெளியூர் - 24.09.2026 | வியாழக்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com




ஜாதகத்தில் புத்திர யோகம்? ஜோதிடம் சொல்வது?

கொட்டிக்கிடக்கும் வேலைவாய்ப்புகள்!

பத்திரப்பதிவில் அதிரடி மாற்றம்...!

தமிழகம் வருகிறார் ராகுல்!

## ஜி20 உச்சி மாநாட்டுக்காக அமெரிக்கா செல்லும் பிரதமர் மோடி! டிரம்ப்பை சந்திக்கிறார்!!




புதுடெல்லி, செப். 23–

ஜி20 மாநாட்டில் கலந்து கொள்வ தற்காக இந்திய பிரதமர் நரேந்திர மோடி வருகிற டிசம்பரில் அமெரிக்கா செல்லவுள்ளார்.

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தின் நேஷனல் டோரா மியாமி ரிசார்ட்டில் ஜி20 மாநாடு வருகிற டிசம்பர் மாதம் நடைபெ றவிருக்கிறது. பல்வேறு உலகத் தலைவர்கள் பங்கேற்கும் இந்த மாநாட்டை அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தலைமை தாங்கும் நிலையில், மாநாட்டில் கலந்து கொள்வ தற்காக பிரதமர் மோடி, டிச.14, 15 ஆகிய இரண்டு நாள்கள் அமெரிக்கா பயணம் மேற்கொள்வார் என்று எதிர்பார்க்கப்படு கிறது. இருதரப்பு வர்த்தகம் மற்றும் ரஷியாவிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்கும் நாடுகள் மீது விதிக்கப்பட்டுள்ள 100 சதவிகித வரிகள் மூலமாக இந்தியாவை அச்சுறுத்திவரும் சூழலில் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் அதிபர் டொனால்ட் டிரம்ப் இருவரும் சந்திக்கவி ருப்பது முக்கியத்துவம் பெற்றுள்ளது.

வழக்கமாக பிரதமர் மோடியின் பயணம் குறித்த அறிவிப்புகள், தேதிக்கு நெருங்கிய நாள்களில் வெளியிடப்படும் என்பதால் அதுபற்றிய அதிகாரப்பூர்வ அறிவிப்புகள் வெளியாகவில்லை.

இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதர் செர்ஜியோ கோர் கூறுகையில், "ஜி20 உச்சிமாநாட்டில்டிரம்ப்சந்திக்கவிருக்கும் முக்கிய தலைவர்களில் பிரதமர் மோடியும் ஒருவர்" என்றார். ஜி20 மாநாட்டின் ஒரு பகுதியாக இந்தியா, அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலி யாவை ஒன்றிணைக்கும் 'குவாட்' தலைவர்களுக்கான உச்சிமா நாட்டின் ஏற்பாடுகளும் நடை பெற்று வருகின்றன. புளோரிடாவுக்கு மேற்கொள்ளும் பயணத்தைத் தொடர்ந்து, பிரதமர் மோடி கனடாவுக்கும் பயணம் மேற்கொண்டு அந்நாட்டு பிரதமர் மார்க் கார்னியை சந்திக்க வாய்ப்புள்ளதாகத் தூதரக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## ஆயுஷ்மான் பாரத்: 60 கோடி பேருக்கு காப்பீடு – மோடி பெருமிதம்!



புதுடில்லி, செப். 23–

ஆயுஷ்மான் பாரத் திட்டம் தொடங்கி 8 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், 60 கோடிக்கும் அதிகமானோர் மருத்துவக் காப்பீடு பெறுவதாக பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

குடும்பத்திற்கு ஆண்டுக்கு ரூ.5 லட்சம் வரை இலவச மருத்துவக் காப்பீடு வழங்கும் இத்திட்டம், ஏழை மற்றும் நடுத்தர மக்களின் மருத்துவச் செலவுச் சுமையைக் குறைப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## செப் 28-ல் முதலமைச்சர் மீனாட்சி அம்மன் தரிசனம்?





மதுரை,செப். 23–

கடந்த 17–ந் தேதி கும்பாபிஷேகம் நடைபெற்ற மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் சாமி தரிசனம் செய்யவும் முதலமைச்சர் விஜய் திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

த.வெ.க. அரசின் முக்கிய தேர்தல் வாக்குறுதியான தாய்மாமன் தங்க மோதிரம் வழங்கும் விழா மதுரையில் வருகிற 28–ந்தேதி நடைபெறுகிறது. மதுரை அரசு மருத்துவமனையில் நடைபெறும் இந்த விழாவில் கடந்த ஜூன் 22–ந்தேதி முதல் பிறந்த குழந்தைகளுக்கு தலா 1 கிராம் தங்க மோதிரத்தை முதலமைச்சர் விஜய் வழங்குகிறார். இதற்காக மதுரை அரசு ஆஸ்பத்திரியில் உள்ள மகப்பேறு வார்ட்டில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. மேலும் அரசு மருத்துவமனை கட்டிடங்கள், வளாகங்கள் ஆகியவற்றையும் தூய்மைப்படுத்தும் பணியும் நடந்து வருகிறது.

முதல் கட்டமாக மருத்துவமனை வளாகத்தில் உள்ள சாலைகள் சீரமைக்கப்பட்டு வருகிறது. மேலும் சேதமடைந்த கட்டிடப்பகுதிகள் பொதுப்பணித்துறை மூலம் சரி செய்யப்பட்டு வருகின்றன.

ஆஸ்பத்திரி வளாகத்தில் தேங்கும் குப்பை, கழிவுகளை முழுமையாக அகற்றும் வகையில் தூய்மை பணியாளர்களும் பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். அரசு மருத்துவமனையை சுற்றியுள்ள சாலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றும் பணியும் தீவிரப்படுத்தப்பட்டு உள்ளது.

முதலமைச்சர் விஜய்யின் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாகவும், நோயாளிகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் தங்க மோதிரம் வழங்கும் விழாவை நடத்துவது குறித்தும் மாவட்ட நிர்வாகமும், மாநகராட்சியும், போலீசாரும் இணைந்து பணிகளை செய்து வருகிறார்கள்.

கலெக்டர் நிஷாந்த் கிருஷ்ணா, மாநகராட்சி கமிஷனர் கவுரவ்குமார், போலீஸ் கமிஷனர் ராஜேந்திரன், அரசு மருத்துவமனை டீன் அருள் சுந்தரேஷ் குமார் மற்றும் அதிகாரிகள் இது தொடர்பாக ஆலோசனை நடத்தி முன்னேற்பாடு பணிகளை தீவிரப்படுத்தி வருகிறார்கள். இதனிடையே கடந்த 17–ந் தேதி கும்பாபிஷேகம் நடைபெற்ற மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் சாமி தரிசனம் செய்யவும் முதலமைச்சர் விஜய் திட்டமிட்டுள்ளதாக கூறப்படு கிறது. கும்பாபிஷேக தினத்தன்று விழாவில் பங்கேற்க திட்டமிட்டிருந்த முதலமைச்சர் விஜய் லண்டன் பயணம் காரணமாக மதுரை வரவில்லை. முதலமைச்சராக பதவியேற்ற பின்னர் முதன் முறையாக மதுரை வரும் விஜய் மீனாட்சி அம்மன் கோவிலில் சாமி தரிசனம் செய்ய விரும்புவதாக த.வெ.க.வினர் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக போலீசார் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்ய திட்டமிட்டுள்ளனர். இதற்காக தேவைப்படும் பட்சத்தில் வெளி மாவட்டங்களில் இருந்தும் போலீசாரை வரவழைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

மதுரை விமான நிலையத்தில் இருந்து விழா நடைபெறும் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை மற்றும் மீனாட்சி அம்மன் கோவில் உள்ளிட்ட பகுதிகளில் செய்யப்பட வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து தீவிர ஆலோசனை நடத்தப்பட்டு வருவதாக போலீஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும் முதலமைச்சர் விஜய் வருகை தொடர்பாக அதிகார பூர்வ தகவல் சென்னை டி.ஜி.பி. அலுவலகத்தில் இருந்து வந்த பின்னர் மீனாட்சி அம்மன் கோவில் பகுதிகளில் முழுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் போலீசார் தெரிவித்தனர்.

முதலமைச்சர் விஜய் மதுரையில் சுற்றுப்பயணம் செய்யும் பகுதிகளில் மக்கள் கூட்டத்தை கட்டுப்படுத்தும் வகையில் பாதுகாப்பு தடுப்புகள் அமைப்பது தொடர்பாகவும் அதிகாரிகள் ஆலோசித்து வருகிறார்கள்.




## நவராத்திரியில் நாடாளுமன்றம்?

# மீண்டும் களமிறங்கும் மறுவரையறை? மகளிர் இடஒதுக்கீடு மசோதாவுடன் சிறப்பு அமர்வு?



புதுடெல்லி, செப். 23–

மகளிர் இடஒதுக்கீடு மற்றும் தொகுதி மறுவரையறை தொடர்பான மசோதாக்களை மீண்டும் தாக்கல் செய்ய, நவராத்திரி பண்டிகைக் காலத்தில் நாடாளுமன்ற சிறப்பு அமர்வைக் கூட்டுவது குறித்து மத்திய அரசு பரிசீலித்து வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. அக்டோபர் 11 முதல் 15 வரை இந்த அமர்வு நடைபெறலாம் எனக் கூறப்படுகிறது.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் ஜூலை 20 முதல் ஆகஸ்ட் 13 வரை நடைபெற்றது. எதிர்க்கட்சிகளின் அமளிக்கு மத்தியில் 12 மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டன. எனினும், எதிர்பார்க்கப்பட்ட மகளிர் இடஒதுக்கீடு மற்றும் தொகுதி மறுவரையறை மசோதாக்கள் கொண்டுவரப்படவில்லை.

ஆகஸ்ட் 13 அன்று இரு அவைகளும் தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டன. ஆனால், கூட்டத்தொடரை முறைப்படி முடித்துவைக்கும் குடியரசுத் தலைவரின் அறிவிப்பு 40 நாள்களாகியும் வெளியாகவில்லை. இதனால், புதிய கூட்டத்தொடரை அறிவிக்காமல் மீண்டும் அவைகளைக் கூட்ட அரசு திட்டமிடுவதாக ஊகங்கள் வலுத்துள்ளன.

2029 மக்களவைத் தேர்தலில் 33 சதவீத மகளிர் இடஒதுக்கீட்டை அமல்படுத்தவும், மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை 850 வரை உயர்த்தவும் வகை செய்யும் அரசமைப்புச் சட்டத் திருத்த மசோதா கடந்த ஏப்ரல் சிறப்பு அமர்வில் தாக்கல் செய்யப்பட்டது. தேவையான மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கிடைக்காததால் அந்த மசோதா தோல்வியடைந்ததாகச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள்தொகை அடிப்படையிலான தொகுதி மறுவரையறையால் தங்களது பிரதிநிதித்துவம் குறையும் எனத் தென்மாநிலங்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. இதனை எதிர்கொள்ள, அனைத்து மாநிலங்களிலும் ஒரே சீராக 50 சதவீத தொகுதிகளை அதிகரிக்கும் அம்சத்தை இணைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த மாற்றத்துடன் மசோதாக்களை மீண்டும் தாக்கல் செய்து நிறைவேற்றுவதற்கான பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இருப்பினும், சிறப்பு அமர்வுக்கான தேதிகள் மற்றும் மசோதாக்களின் இறுதி அம்சங்கள் குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு இன்னும் வெளியாகவில்லை. எனவே, நவராத்திரி அமர்வு நடைபெறுமா, திருத்தப்பட்ட மசோதாக்களுக்கு போதிய ஆதரவு கிடைக்குமா என்பது குறித்த எதிர்பார்ப்பு நிலவுகிறது. அரசின் அதிகாரப்பூர்வ அறிவிப்புக்குப் பிறகே இதுகுறித்த முழுமையான விவரங்கள் தெளிவாகத் தெரியவரும்.

## தமிழகம் வருகிறார் ராகுல்!



சென்னை, செப். 23–

லோக்சபா எதிர்க்கட்சித் தலைவர் ராகுல், அக்டோபர் முதல் வாரத்தில் தமிழகம் வந்து, கல்லூரி மாணவர்களுடன் கலந்துரையாட உள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

2029 லோக்சபா தேர்தலை முன்னிட்டு, 'மாணவர் குரல்' நிகழ்ச்சி வாயிலாக மாநிலந்தோறும் மாணவர்களை ராகுல் சந்தித்து வருகிறார். தமிழகத்தில் இந்நிகழ்ச்சியைப் பிரமாண்டமாக நடத்த, தமிழக காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாகூர் திட்டமிட்டு ள்ளார். சென்னை சத்தியமூர்த்தி பவனில் அவரது தலைமையில் நடந்த ஆலோசனையில், ராகுலின் உதவியாளர் பைஜு மற்றும் கட்சி நிர்வாகிகள் பங்கேற்றனர். அக்டோபர் முதல் வாரத்தில் ராகுலை அழைத்து வந்து, மாணவர் கலந்துரையாடலை நடத்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## கரையை நெருங்கும் தாழ்வு மண்டலம்! ஆந்திரா- ஒடிசாவுக்கு கனமழை எச்சரிக்கை!



சென்னை, செப். 23–

வங்கக்கடலில் நிலவும் காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் தீவிரமடைந்து, செப்டம்பர் 23 இரவு விசாகப்பட்டினம் கோபால்பூர் இடையே கரையைக் கடக்க வாய்ப்புள்ளதாக வழங்கப்பட்ட செய்தி தெரிவிக்கிறது. ஆந்திரா, ஒடிசாவில் கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில், ஒடிசாவின் பல மாவட்டங்களில் பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டு, மீட்புக் குழுக்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. இது புயலாக வலுப்பெறுவது இன்னும் உறுதியாகவில்லை.

தலையங்கம்
மதுரை மணி
புதன்கிழமை 23.09.2026
விசுவாவசு தமிழ் வருடம்
புரட்டாசி மாதம் 06-ம் தேதி

# பதவி விலகலாம்; பொறுப்பிலிருந்து விலகலாமா?



வாக்குச்சாவடியில் வரிசையில் நிற்கும் குடிமகன் செலுத்துவது ஒரு வாக்கை மட்டுமல்ல; அடுத்த ஐந்தாண்டுகளுக்கான தனது நம்பிக்கையையும் சேர்த்துத்தான். அந்த நம்பிக்கையைப் பெற்று வென்றவர், இரண்டு மாதங்களிலேயே பதவியை ராஜினாமா செய்துவிட்டு, மற்றொரு கட்சியின் வேட்பாளராக மீண்டும் அதே மக்களிடம் வாக்குக் கேட்டு வந்தால், ஜனநாயகத்தின் பொருள் என்னவாகிறது?

பதவி விலகுவது ஒருவரது உரிமையாக இருக்கலாம். கட்சியை மாற்றுவதற்கும் அவருக்குக் காரணங்கள் இருக்கலாம். ஆனால், அந்த முடிவால் மீண்டும் தேர்தலை எதிர்கொள்ளும் மக்களுக்கும் விளக்கம் பெறும் உரிமை உண்டு. வெற்றி பெற்ற நாளுக்கும் விலகிய நாளுக்கும் இடையில் என்ன மாறியது? கொள்கையா, தொகுதியின் தேவையா, அல்லது தனிப்பட்ட அரசியல் கணக்கா? இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்லாமல், புதிய கட்சியின் துண்டை அணிந்துகொள்வதால் பழைய பொறுப்பு மறைந்துவிடாது.

தேர்தல் என்பது அரசியல் கட்சிகளின் உள் ஏற்பாடுகளைச் சரிசெய்யும் நிகழ்ச்சியல்ல. அதற்காக அரசு இயந்திரம் இயங்குகிறது; பொதுப் பணம் செலவாகிறது; ஆசிரியர்களும் அரசு ஊழியர்களும் தேர்தல் பணிகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர். மக்கள் தங்கள் அன்றாட வேலைகளை ஒதுக்கிவிட்டு மீண்டும் வாக்களிக்க வருகின்றனர். தவிர்க்க முடியாத காரணங்களால் உருவாகும் இடைத்தேர்தலுக்கும், அரசியல் வசதிக்காக உருவாக்கப்படும் இடைத்தேர்தலுக்கும் உள்ள வேறுபாட்டை நாம் உணர வேண்டும்.

இந்த விவகாரத்தில் நீதிமன்றத்தின் நிலைப்பாட்டையும் துல்லியமாகப் புரிந்துகொள்வது அவசியம். 2019ஆம் ஆண்டு கர்நாடக சட்டப்பேரவை உறுப்பினர்கள் தொடர்பான வழக்கில், தகுதிநீக்கத்தை உறுதிசெய்த உச்சநீதிமன்றம், சட்டப்பேரவையின் எஞ்சிய காலம் முழுவதும் அவர்கள் தேர்தலில் போட்டியிடக்கூடாது என்று சபாநாயகர் விதித்த தடையை ஏற்கவில்லை. சட்டத்தில் இல்லாத அத்தகைய தடையைச் சபாநாயகர் உருவாக்க முடியாது என்பதே அதன் அடிப்படை. இதனை, கட்சி மாறும் அரசியலுக்கு நீதிமன்றம் நற்சான்று வழங்கிவிட்டதாக எடுத்துக்கொள்ள முடியாது. தீர்ப்பு குறித்த விவரம். சட்டம் அனுமதிக்கும் செயல் ஒவ்வொன்றும் பொதுவாழ்வில் நியாயமான செயலாகிவிடாது. சட்டத் தகுதியுடன் சேர்ந்து அரசியல் நேர்மையும் மக்களின் பிரதிநிதிக்குத் தேவை. நீதிமன்றம் நடைமுறையிலுள்ள சட்டத்தின் அடிப்படையில் தீர்ப்பளிக்கிறது. அந்தச் சட்டத்தில் குறைபாடு இருப்பதாகக் கருதினால், அதைச் சீர்திருத்த வேண்டிய பொறுப்பு நாடாளுமன்றத்திற்கும் அரசியல் கட்சிகளுக்கும் இருக்கிறது.

அதேவேளையில், பதவி விலகும் அனைவரையும் ஒரே அளவுகோலால் குற்றஞ்சாட்டுவதும் நியாயமல்ல. உடல்நலம், உண்மையான கொள்கை முரண்பாடு, மக்கள் நலனுக்கு எதிரான கட்சித் தீர்மானம் போன்ற காரணங்கள் இருக்கலாம். மனச்சாட்சியின் அடிப்படையில் எதிர்ப்புத் தெரிவிக்கும் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும். ஆனால், அந்த உரிமையைப் பதவி பேரத்திற்கான வழியாகப் பயன்படுத்துவதைத் தடுக்கும் பொறுப்பும் ஜனநாயகத்திற்கு உண்டு.

பதவியைத் துறந்துவிட்டு மீண்டும் மக்களிடம் தீர்ப்புக் கேட்பதே முறையான நடைமுறை என்று ஒரு வாதம் முன்வைக்கப்படுகிறது. அதில் பொருள் இருக்கிறது. எனினும், மறுபடியும் போட்டியிடுவது மட்டுமே முந்தைய முடிவிற்கான விளக்கமாகிவிடாது. முன்பு எதிர்த்த கட்சி இப்போது ஏன் ஏற்றதாகிறது? முன்பு கொடுத்த வாக்குறுதிகளின் நிலை என்ன? புதிய அரசியல் உறவால் தொகுதி மக்களுக்கு என்ன பயன்? இவற்றை வெளிப்படையாகச் சொல்ல வேண்டும்.

இந்தப் பொறுப்பு கட்சி மாறுபவருக்கு மட்டும் உரியதல்ல. அவரை வரவேற்று உடனடியாக வேட்பாளராக்கும் கட்சிக்கும் உரியது. எதிரணியில் நிகழும்போது "ஜனநாயகப் படுகொலை" என்று கண்டித்துவிட்டு, தமது அணிக்குச் சாதகமாக நிகழும்போது "மனச்சாட்சியின் முடிவு" என்று பாராட்டுவது கொள்கை அரசியலாகாது. அதிகாரம் மாறும்போது அறத்தின் அளவுகோலும் மாறக்கூடாது.

எனவே, கட்சித் தாவல் தடுப்புச் சட்டத்தின் செயல்திறன், தகுதிநீக்க மனுக்களை முடிவுசெய்வதற்கான காலவரம்பு, பதவி விலகலைத் தொடர்ந்து உடனடியாக வேறு கட்சியில் போட்டியிடும் நடைமுறை ஆகியவை குறித்து விரிவான நாடாளுமன்ற விவாதம் தேவை. எந்தச் சீர்திருத்தமும் உண்மையான கருத்து வேறுபாட்டை ஒடுக்காமல், பதவிக்காக மக்களின் தீர்ப்பை மாற்றிப் பயன்படுத்துவதைத் தடுக்கும் வகையில் அமைய வேண்டும்.

மக்களும் வேட்பாளரின் புதிய சின்னத்தைப் பார்ப்பதற்கு முன், அவரது பழைய வாக்குறுதிகளை நினைவுகூர வேண்டும். ஜனநாயகத்தில் இறுதித் தீர்ப்பை வழங்கும் அதிகாரம் வாக்காளரிடமே இருக்கிறது. அந்த அதிகாரம் விழிப்புணர்வுடன் பயன்படுத்தப்படும்போதுதான் அரசியல் பொறுப்புணர்வு வலுப்பெறும்.

ராஜினாமா கடிதத்தைச் சபாநாயகரிடம் கொடுத்துவிடலாம். ஆனால், மக்கள் அளித்த நம்பிக்கைக்கான கணக்கை மக்களிடம்தான் கொடுத்தாக வேண்டும்.

# நாமக்கல்லில் வண்ணத்துப்பூச்சி வாழ்விடப் பூங்கா திறப்பு விழா!

நாமக்கல், செப். 23–

நாமக்கல் மாநகராட்சிக்குட்பட்ட காவேட்டிப்பட்டி பூங்காவில், சுற்றுச்சூழல் கல்வித் திட்டத்தின் கீழ், வண்ணத்துப்பூச்சி வாழ்விடப் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. இதன் திறப்பு விழாவிற்கு எம்எல்ஏ திலீப், மாநகராட்சி ஆணையர் செல்வபாலாஜி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட ஆட்சியர் மதுபாலன் தலைமை வகித்து பூங்காவினை திறந்து வைத்துப் பார்வையிட்டார். பின்னர் அவர் கூறியதாவது: காவேட்டிப்பட்டி பூங்காவில், சுற்றுச்சூழல் கல்வித் திட்டத்தின் கீழ் வண்ணத்துப்பூச்சி வாழ்விடப் பூங்கா (பட்டர்ஃபிளை ஹேபிடேட் பார்க்) அமைக்கப்பட்டுள்ளது. வண்ணத்துப்பூச்சிகளின் சூழலியல் முக்கியத்துவம் மற்றும் பல்லுயிர் பாதுகாப்பின் அவசியம் குறித்து மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். வளர்ந்த வண்ணத்துப்பூச்சிகளுக்குத் தேவையான உணவை வழங்கும் பல்வேறு வகையான தேன் மற்றும் பூக்கள் நிறைந்த தாவரங்களைக் கொண்டு இப்பூங்கா உருவாக்கப்பட்டுள்ளது. பல்வேறு வண்ணத்துப்பூச்சி இனங்களின் இனப்பெருக்கம் மற்றும் வாழ்க்கைச் சுழற்சிக்குத் துணைபுரியும் வகையிலான தாவரங்களும் (நெக்டார் பிளாண்ட்ஸ்) இங்கு வளர்க்கப்படுகின்றன.

இப்பூங்கா மாவட்டத்திற்கான ஒரு முக்கியமான கல்வி மற்றும் பல்லுயிர் பாதுகாப்பு முயற்சியாகத் திகழ்கிறது என தெரிவித்தார்.






ஈரோடு மாநகர SDTU ஆட்டோ தொழிற்சங்கம் சார்பில் மரப்பாலம் நால்ரோட்டில் "பைக் டாக்ஸியை" முற்றிலும் தடைசெய்வது உள்ளிட்ட ஐந்து அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு அரசு உடனடியாக கவனம் செலுத்திட வேண்டி ஆர்ப்பாட்டம் செய்தனர். இந்த ஆர்ப்பாட்டத்திற்கு சாதிக் தலைமை தாங்கினார் மாவட்டச் செயலாளர் அப்துல் ரஹ்மான் முன்னிலை வகித்தார் மாநில பொதுச் செயலாளர் ரவுப் நிஸ்தார் கண்டன உரையாற்றினார் இந்நிகழ்ச்சியில் மாரிமுத்து உள்ளிட்ட SDTU தொழிற்சங்க நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# பழனி முருகன் மலைக் கோவிலில் பக்தர்களுக்கு நிலவேம்பு குடிநீர்!




பழனி செப்டம்பர் 23 –

தமிழகத்தில் தற்பொழுது பல்வேறு இடங்களில் டெங்கு மற்றும் உண்ணிக்காய்ச்சல் வேகமாக பரவி வருகிறது. இதன் காரணமாக சுகாதார துறையினர் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை எடுத்து வருகின்றனர். கோவிலுக்கு வரும் பக்தர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு, பக்தர்களுக்கு நிலவேம்பு குடிநீர் நேற்று முதல் வழங்கப்பட்டு வருகிறது. அதை பக்தர்கள் ஆர்வத்துடன் வாங்கி அருந்தி வருகின்றனர். இதற்கான ஏற்பாடுகளை கோவில்நிர்வாக அதிகாரி பொறுப்பு வெங்கடேசன் செய்து இருந்தார்.



தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் தமிழ்நாடு முழுவதும் 6 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை அரசு பள்ளி மற்றும் அரசு உதவிபெறும் பள்ளியில் பயிலும்மாணவ, மாணவிகளுக்கு பெருந்தலைவர் காமராசர் காலை உணவு திட்ட விரிவாக்கத்தினை சென்னையில் தொடங்கிவைத்தார். தேனி மாவட்டம் உத்தமபாளையம்ஊராட்சி ஒன்றியம் மேல சிந்தலைச்சேரி அரசு மேல்நிலைப்பள்ளியில்.மாவட்ட ஆட்சியர் வைத்திநாதன் மாணவ, மாணவிகளுக்கு காலை உணவினை பரிமாறி, உடன் அமர்ந்து உணவு அருந்தினார். உடன் கம்பம் சட்டமன்ற உறுப்பினர்.பி.எல்.ஏ.ஜெகநாத் மிஸ்ரா உள்ளார்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட புங்கந்துறை ஊராட்சி, அடுக்கல்பாளையம் முன்னாள் ஊராட்சி மன்ற உறுப்பினர் கவிதா முத்துசாமி அவர்கள் மதிமுக–வில் இருந்து விலகி தனது குடும்பத்தினருடன் எடப்பாடியாரின் தலைமையை ஏற்று அஇஅதிமுக–வில் இணைந்துள்ளார்கள். திருப்பூர் மாநகர் மாவட்ட கழக செயலாளர் வேல்குமார் .சாமிநாதன் அவர்கள் கழகத்தில் இணைந்த திருமதி.கவிதா முத்துசாமி அவர்களின் குடும்பத்தினருக்கு சால்வை அணிவித்து வரவேற்றார். இந்நிகழ்வில் குண்டடம் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் குப்புசாமி,ஒன்றிய இணை செயலாளர் .விஜயகுமார் திருப்பாத்தாள், ரங்கபாளையம் ரத்தினசாமி, .துரைசாமி, திருப்பூர் மாநகர் மாவட்ட நிர்வாகிகள் மாவட்ட அம்மா பேரவை செயலாளர் அட்லஸ் திரு. லோகநாதன், மாவட்ட வர்த்தக அணி செயலாளர் . பழனிசாமி, மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் பிரேம்குமார், ஒன்றிய பேரவை செயலாளர் .சுரேஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



தமிழ்நாடு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க ஊழியர்களுக்கு எதிராக அவதூராகவும் தரக்குறைவாக பேசி வரும் விவசாய சங்க நிர்வாகி ஈசன் முருகசாமி மீது தமிழக அரசு நடவடிக்கை எடுக்க கோரி தமிழ்நாடு மாநில தொடக்க கூட்டுறவு வங்கி அனைத்து பணியாளர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் கே. மாரிமுத்து தலைமையில் ஈரோடு மாவட்ட ஆட்சியரிடம் மனு வழங்கினர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட நிர்வாகிகள் மதியழகன், செந்தில்குமார், முத்துகிருஷ்ணன், வசந்தகுமார், மேசப்பன் உள்ளிட்ட கூட்டுறவு சங்க பணியாளர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# உங்கள் சோப்பு சைவமா, அசைவமா? இனி நிறக்குறியீடு சொல்லிவிடும்!



சோப்பு, ஷாம்பு, பற்பசை மற்றும் அழகு சாதனப் பொருட்களின் மூலப்பொருட்களை நுகர்வோர் அறிந்துகொள்ளும் வகையில், சைவஅசைவ குறியீடுகள் தொடர்பான விதிகளை மத்திய அரசு திருத்தியுள்ளது. அன்றாடம் பயன்படுத்தும் தனிநபர் பராமரிப்புப் பொருட்களில் தாவரங்கள் மட்டுமின்றி, விலங்குகளிலிருந்து பெறப்படும் மூலப்பொருட்களும் பயன்படுத்தப்படலாம். இவற்றை வாங்கும்போதே அடையாளம் காணும் வகையில், பொட்டலங்களில் நிறக்குறியீடுகள் இடம்பெற வேண்டும். செப்டம்பர் 21 அன்று அறிவிக்கப்பட்டுள்ள சட்டப்பூர்வ அளவீட்டு விதித் திருத்தத்தின்படி, சோப்பு, ஷாம்பு, பற்பசை, அழகு சாதனங்கள் மற்றும் பிற தனிநபர் பராமரிப்புப் பொருட்களுக்கு இந்த நடைமுறை பொருந்தும். செய்தி ஆதாரம்.

**எந்த நிறம் எதைக் குறிக்கும்?**

சைவ மூலப்பொருட்களால் தயாரிக்கப்பட்ட பொருட்களில் பச்சை நிறப் புள்ளி இடம்பெற வேண்டும். அசைவ மூலப்பொருட்கள் கொண்ட பொருட்களில் சிவப்பு அல்லது பழுப்பு நிறப் புள்ளி குறிப்பிடப்பட வேண்டும்.

இந்தக் குறியீடுகள் பொட்டலத்தின் பிரதான காட்சிப் பகுதியின் மேற்புறத்தில், வாங்குபவர்களின் பார்வைக்குத் தெளிவாகத் தெரியும்படி அச்சிடப்பட வேண்டும். இதன்மூலம் பொருளின் மூலப்பொருள் தன்மையை அறிந்து, நுகர்வோர் தங்களது விருப்பத்துக்கு ஏற்ப தேர்வு செய்ய முடியும். விதித் திருத்த விவரம்

சைவஅசைவ குறியீடுகள் தொடர்பான விதிகள் முந்தைய அரசு ஆவணங்களிலும் இடம்பெற்றுள்ளன. எனவே, இதை முதன்முறையாக அறிமுகமாகும் நடைமுறை என்று குறிப்பிடுவதைக் காட்டிலும், குறியீடுகள் தொடர்பான புதிய விதித் திருத்தம் என்று குறிப்பிடுவதே துல்லியமானது. மத்திய அரசின் விதித் தொகுப்பு.

# பண்டிகைக்கு விமானப் பயணமா? கட்டணம் உயர வாய்ப்பு!



சென்னை, செப். 23–

பண்டிகைக் காலத்தில் விமானக் கட்டணங்களுக்கு உச்சவரம்பு விதிக்கப்படாது என்றும், கட்டணங்களை நியாயமான அளவில் வைத்திருக்க விமான நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்படும் என்றும் மத்திய சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் கே. ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கு போர்ச் சூழலால் விமான எரிபொருள் விலை உயர்ந்துள்ளதாகக் கூறிய அவர், விமான நிறுவனங்களின் இயக்கச் செலவில் 40 முதல் 43 சதவீதம் வரை எரிபொருளுக்குச் செலவாவதால் கட்டணங்களிலும் அதன் தாக்கம் ஏற்படுவதாக விளக்கி னார். பயணிகளின் சிரமத்தைக் குறைக்க விமான நிறுவனங்க ளுடன் அரசு தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தி வருகிறது. இருப்பினும், பண்டிகைக் காலத்தில் தேவை அதிகமுள்ள வழித்தடங்களில் கட்டணங்கள் உயர வாய்ப்புள்ளது.



# ஜாதகத்தில் புத்திர யோகம்? ஜோதிடம் சொல்வது?



குழந்தைப் பாக்கியம் குறித்து ஜோதிடம் கூறுவது என்ன? ஐந்தாம் வீடு, குருவின் பலம், தசாபுத்தி ஆகியவற்றின் பின்னணியைப் பார்ப்போம்.

திருமணப் பொருத்தம் பார்க்கும்போது பலரும் அறிய விரும்பும் அம்சங்களில் குழந்தைப் பாக்கியமும் ஒன்று. பாரம்பரிய ஜோதிடத்தில் இதை ஆராய்வதற்கு ஜாதகத்தின் ஐந்தாம் வீட்டுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இதுவே 'புத்திர ஸ்தானம்' என்று அழைக்கப்படுகிறது.

**ஐந்தாம் வீடு சொல்லும் தகவல்**

சந்ததி, பூர்வ புண்ணியம் ஆகியவற்றுடன் ஐந்தாம் வீட்டை ஜோதிட மரபு தொடர்புபடுத்துகிறது. இந்த வீட்டில் இருக்கும் கிரகங்கள், அதன் அதிபதியின் நிலை, பிற கிரகங்களின் பார்வை ஆகியவற்றை இணைத்து ஜோதிடர்கள் பலன் கூறுகின்றனர்.

**குருவின் பலம் ஏன் முக்கியம்?**

குரு பகவான் 'புத்திர காரகன்' என்று ஜோதிடத்தில் குறிப்பிடப்படுகிறார். குருவின் வலிமையும், ஐந்தாம் வீட்டுடனான தொடர்பும் சாதகமாக இருப்பதை குழந்தைப் பாக்கியத்துக்கான நல்ல அமைப்பாகக் கருதுகின்றனர். இவை ஜோதிட நம்பிக்கைகளின் அடிப்படையிலான விளக்கங்களாகும்.

**ஒரு கிரகத்தை மட்டும் பார்த்தால் போதுமா?**

ஒரே கிரகத்தின் இருப்பிடத்தை வைத்து முடிவு கூறக்கூடாது என்பதே ஜோதிட மரபில் வலியுறுத்தப்படும் கருத்து. தம்பதியரின் ஜாதகங்கள், தசாபுத்தி, கிரகப் பெயர்ச்சிகள் உள்ளிட்ட அம்சங்களைச் சேர்த்தே பலன்கள் விளக்கப்படுகின்றன. எனவே, ஒரு குறிப்பிட்ட அமைப்பைப் பார்த்துவிட்டுக் குழந்தைப் பாக்கியம் இல்லை என்று அச்சப்பட வேண்டியதில்லை.

**நம்பிக்கையுடன் தெளிவும் அவசியம்**

ஜாதகத்தின் மூலம் குழந்தையின் பாலினம், குழந்தைகளின் எண்ணிக்கை அல்லது கருச்சிதைவை உறுதியாகக் கணிக்க முடியாது. வழிபாடு, மந்திரம், பரிகாரம் ஆகியவை தனிப்பட்ட ஆன்மிக நம்பிக்கைகள்; குழந்தைப் பேற்றை உறுதி செய்யும் மருத்துவ முறைகள் அல்ல.

கருத்தரிப்பில் சிரமம் இருந்தால் தம்பதியர் இருவரும் மருத்துவ ஆலோசனை பெறுவது முக்கியம். அதற்கான காரணங்கள் ஆண், பெண் இருவரிடமும் இருக்கலாம் என்பதால், ஒருவரை மட்டும் குறை கூறுவதைத் தவிர்க்க வேண்டும். மருத்துவ ஆதாரம்.



# சினிமா துளிகள்..!

## திரைச்செய்திகள்: கோலிவுட் முதல் ஹாலிவுட் வரை!

### கர்ணனாக மாறும் ராகவா லாரன்ஸ்!

ராகவா லாரன்ஸ் நடிக்கும் புதிய படத்துக்கு 'மஹாவீர் கர்ணா' என்று பெயரிடப்பட்டுள்ளது. ரமேஷ் வர்மா இயக்கும் இப்படத்தின் முதல் தோற்றம் வெளியாகியுள்ளது. கர்ணன் கதாபாத்திரத்தில் நடிப்பது மகிழ்ச்சியளிப்பதாக லாரன்ஸ் தெரிவித்துள்ளார். தமிழ் உள்ளிட்ட ஐந்து மொழிகளில் உருவாகும் படம், 2027ஆம் ஆண்டு வெளியாகத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 'திரிஷ்யம்' கதைக்கு முற்றுப்புள்ளி:

அஜய் தேவ்கன் நடிக்கும் 'திரிஷ்யம் 3', 'திரிஷ்யம்: தி கன்க்ளூஷன்' எனப் பெயர் மாற்றப்பட்டுள்ளது. இந்தப் படத்துடன் கதையை நிறைவு செய்வதைத் தெளிவுபடுத்தவே தலைப்பு மாற்றப்பட்டதாக இயக்குநர் அபிஷேக் பதக் தெரிவித்துள்ளார். மலையாளப் பதிப்பிலிருந்து மாறுபட்ட பாதையில் இந்திக் கதை பயணிக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

### மீண்டும் கிளிஃப் பூத் ஆக பிராட் பிட்!

பிராட் பிட் நடித்துள்ள 'தி ஃபர்தர் மிஸ்–அட்வென்சர்ஸ் ஆஃப் கிளிஃப் பூத்' படத்தின் அதிகாரப்பூர்வ டிரெய்லர் வெளியாகியுள்ளது. 'ஒன்ஸ் அபான் எ டைம் இன் ஹாலிவுட்' படத்தில் இடம்பெற்ற கிளிஃப் பூத் கதாபாத்திரத்தில் அவர் மீண்டும் நடித்துள்ளார். குவென்டின் டரான்டினோ திரைக்கதையில், டேவிட் ஃபின்ச்சர் இப்படத்தை இயக்கியுள்ளார்.

### ஹாலிவுட்டில் மெகா இணைப்பு:

பாரமவுண்ட்வார்னர் பிரதர்ஸ் டிஸ்கவரி நிறுவனங்களின் 81 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான இணைப்புக்கு எதிரான வழக்குகளில் சமரசம் ஏற்பட்டுள்ளது. இதனால் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கான முக்கியத் தடை நீங்கியுள்ளது. அமெரிக்காவில் திரைப்படத் தயாரிப்பை அதிகரிப்பது, பாதிக்கப்படும் ஊழியர்களுக்கு ஆதரவு வழங்குவது உள்ளிட்ட உறுதிகளைப் பாரமவுண்ட் அளித்துள்ளது.




## மழைக்காலத்திலும் சருமம் பொலிவாக இருக்கனுமா?



மழைக்காலத்தில் அதிகரிக்கும் ஈரப்பதம், வியர்வை மற்றும் எண்ணெய் பசையால் சருமத்தில் பருக்கள், அரிப்பு போன்ற தொந்தரவுகள் ஏற்படலாம். இக்காலத்தில் சருமத்தை மென்மையாகச் சுத்தம் செய்வதும், ஈரமான ஆடைகளை மாற்றுவதும் பராமரிப்பின் முக்கிய அம்சங்களாகும்.

வேப்பிலை, கற்றாழை, துளசி, புதினா, பச்சைத் தேயிலை ஆகியவை இயற்கை சருமப் பராமரிப்பில் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன. எனினும், இவற்றை வீட்டில் அரைத்துத் தடவுவதால் பருக்கள் அல்லது பூஞ்சைத் தொற்று குணமாகும் என்று உறுதியாகக் கூற முடியாது. மூலிகைச் சிகிச்சைகளின் பலன்கள் குறித்த மருத்துவ ஆதாரங்கள் குறைவாகவே உள்ளன. மருத்துவத் தகவல் ஆதாரம்

கற்றாழை ஜெல் சிலருக்கு இதமளித்தாலும், அரிப்பு, எரிச்சல் அல்லது தடிப்பை ஏற்படுத்தவும் வாய்ப்புள்ளது. இயற்கையானது என்பதால் மட்டும் எல்லோருக்கும் பாதுகாப்பானது என்று கருதக்கூடாது. கற்றாழை குறித்த ஆதாரம் புதிய சருமப் பராமரிப்புப் பொருளை முதலில் கையின் சிறிய பகுதியில் சோதித்துப் பார்க்க வேண்டும். சிவத்தல், அரிப்பு அல்லது எரிச்சல் ஏற்பட்டால் பயன்படுத்துவதை நிறுத்த வேண்டும். சரும நிபுணர்களின் வழிகாட்டுதல்

மென்மையான சுத்தப்படுத்தி, சருமத்துக்கு ஏற்ற ஈரப்பதக் களிம்பு மற்றும் சூரிய ஒளிப் பாதுகாப்பு ஆகியவையே அன்றாடப் பராமரிப்பின் அடிப்படை. நீடித்த அரிப்பு, பருக்கள் அல்லது பூஞ்சைத் தொற்று இருந்தால், வீட்டுச் சிகிச்சையை நம்பித் தாமதிக்காமல் சரும மருத்துவரை அணுக வேண்டும். அடிப்படைப் பராமரிப்பு வழிகாட்டுதல்.

## தொடர்ந்து குறைந்து வரும் தங்கம் விலை..!



சென்னை, செப். 23–

தங்கம் விலை இன்றும் குறைந்துள்ளது. அதன்படி சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.400 குறைந்து, ஒரு சவரன் ரூ.1,13,080–க்கும், கிராமுக்கு ரூ.50 குறைந்து ஒரு கிராம் ரூ.14,135–க்கும் விற்பனை செய்யப்படுகிறது. கடந்த 3 நாட்களில் தங்கம் விலை சவரனுக்கு ரூ.1,200 குறைந்துள்ளது. வெள்ளி விலையில் இன்று எந்தவித மாற்றமும் இல்லை. ஒரு கிராம் ரூ.255–க்கும், ஒரு கிலோ ரூ.2 லட்சத்து 55 ஆயிரத்துக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.



தேனி மாவட்ட ஆட்சியர் கூட்ட அரங்கில் ஸ்ரீ வில்புத்தூர்–மேகமலை புலிகள் காப்பகம், தேசிய வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கி இணைந்து நடத்திய நொச்சியோடை பழங்குடியினர் குடியிருப்புக்கான மாதிரி சூரிய ஆற்றல் பழங்குடியினர் கிராம திட்ட தொடக்கவிழாவில் பழங்குடியினர் உற்பத்தியாளர் நிறுவனம் சார்பில் உருவாக்கம் மற்றும் மேம்பாட்டுக்காக ரூ 27.30 இலட்சம் மதிப்பிலான ஒப்புதல் ஆணையை அங் நிறுவனத்தின் இயக்குனர் குழு உறுப்பினர்களிடம் தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் வைத்திநாதன் வழங்கினார்.

## அறிவிப்பு

மதுரை – 625016, மதுரை தெற்கு, பொன்னகரம், பெரியசாமி கோனார் தெரு, கதவு எண் 16 முகவரியில் வசிக்கும் ரமேஷ்கண்ணன் அவர்களின் குமாரர் **R.புவனேஸ்குமார்** ஆகிய எனது கட்சிக்காரர் கொடுத்த உண்மை தகவலின்படி,

கடந்த 25.08.2026ம் தேதியில் மதுரை புதுமண்டபம் சார்பதிவாளர் அலுவலகம் 1 புத்தகம் 5167/1960 நம்பர் ரிஜிஸ்டர் தானசெட்டில்மெண்ட் அசல் ஆவணத்தையும், 1 புத்தகம் 777/1972 நம்பர் ரிஜிஸ்டர் பாகப்பிரிவினை அசல் ஆவணத்தையும், 3 புத்தகம் 374/1990 நம்பர் ரிஜிஸ்டர் மதிப்பிடாத உயில் அசல் ஆவணத்தையும் பெரியகுளம் டவுன், தென்கரை, தெற்கு அக்ரஹாரத்தில் தவறவிட்டு விட்டார். எனவே அசல் ஆவணத்தை எடுத்தவர்கள் என்வசமோ கீழ்க்கண்ட முகவரியிலோ ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

முகவரி :
**P.சதிஸ்குமார்,** B.A.B.L,
(வழக்கறிஞர்) 4, நகராட்சி வணிக வளாகம்,
தென்கரை, பெரியகுளம்,
மொபைல் எண் : 98431 75966

## பத்திரப்பதிவில் அதிரடி மாற்றம்...!



சென்னை, செப். 23–

தமிழகத்தில் புதிய திட்டங்களில், வீடு, மனை வாங்குவதற்கான பத்திரம் வங்கியில் கடன் பெறுவோர் ஆவண ஒப்படைப்பு அடமானம், கடன் நிறைவுக்கான ரசீது போன்ற ஆவணங்களை, 'ஆன்லைன்' முறையில் பதிவு செய்யலாம். சார்–பதிவாளர் அலுவலகம் செல்லாமல், இந்த ஆவணங்களை பதிவு செய்யும் திட்டம் அமலுக்கு வந்துள்ளது. பயன்பாட்டு நிலையில் எழும் கோரிக்கைகள் அடிப்படையில் இத்திட்டத்தில் சில விஷயங்களை, பதிவுத்துறை சரி செய்து வருகிறது. அந்த வகையில், நேரடி வருகை இல்லாமல், பத்திரங்களை பதிவுக்கு தாக்கல் செய்யும்போது, கட்டணம் செலுத்தி பெறப்படும், வில்லங்க சான்றிதழ் அவசியம் என தெரிவிக்கப்பட்டது.

இதில் உள்ள நடைமுறை பிரச்சினைகள் என்ன என்பதை, அதிகாரிகள் கருத்தில் கொள்ள வேண்டும் என, பல்வேறு தரப்பினரும் வலியுறுத்தினர். அதை ஏற்று வில்லங்க சான்று உள்ளிட்ட விஷயங்களில், நடை முறைகளை மாற்ற பதிவுத்துறை முடிவு செய்துள்ளது.

இது தொடர்பாக, பதிவுத்துறை ஐ.ஜி. அருண் சுந்தர் தயாளன் வெளியிட்டுள்ள உத்தரவில் கூறப்பட்டிருப்பதாவது:–

* புதிய திட்டங்களில் வீடு, மனை விற்பனை பத்திரங்கள், அடமான ஆவணம் போன்றவற்றை பதிவு செய்ய, கட்டணமின்றி இணையதளத்தில் பெறப்படும் வில்லங்க சான்றிதழ் போதுமானது.

* ஆவண ஒப்படைப்பு அடமான பத்திரங்களை, குடிமக்கள் நுழைவு வாயிலாக தாக்கல் செய்யப்பட்டாலும் பதிவுக்கு ஏற்கப்படும்.

* கடன் நிறைவு தொடர்பான ரசீது ஆவணங்களை பதிவு செய்ய வில்லங்க சான்று பார்க்க தேவையில்லை. நேரடி வருகையில்லா பத்திரப்பதிவுக்கு விடுமுறை நாள் கட்டணம் செலுத்த வேண்டாம்.

* நேரடி வருகையில்லா பத்திரப்பதிவில், ஆவணதாரர் எங்கிருந்தும் இணையதளம் வாயிலாக பதிவு செய்ய முடியும் என்பதால் 'பிரசன்டேஷன் பவர்' எனப்படும் சிறப்பு பொது அதிகார ஆவணங்களை பயன்படுத்த முடியாது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## 'தங்கம்தான் ராதாவின் பலவீனம்' - அம்பிகா பரபரப்பு பேட்டி!

சென்னை, செப். 23–

தமிழ் சினிமாவில் 80–களில் பல வெற்றிப் படங்களில் நடித்து குடும்ப ரசிகர்களை கவர்ந்தவர்கள் நடிகை அம்பிகா மற்றும் ராதா சகோதரிகள். இவர்கள் நடிகர்கள் ரஜினிகாந்த், கமல்ஹாசன், மோகன் உள்ளிட்ட பல முன்னணி நடிகர்களுக்கு ஜோடியாக நடித்துள்ளனர். தற்போது இருவரும் சின்னத்திரை நிகழ்ச்சிகளில், தொலைக்காட்சி தொடர்களில் நடித்து வரும் நிலையில், சொந்த தொழில் தொடர்பான பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில், ரூ.46 கோடி அளவில் காசோலை மோசடி நடைபெற்றதாக தனது சகோதரி நடிகை அம்பிகா மற்றும் சகோதரர் குஞ்சன் நாயர் மீது நடிகை ராதா சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் புகார் அளித்தது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ராதா அளித்த புகாரில், "ஆர்.ஆர். கார்டன் என்ற பெயரில் பிசினஸ் செய்து வருகிறேன். நான் சென்னைக்கு வரும்போதெல்லாம், சென்னை வளசரவாக்கத்திலுள்ள எனது வீட்டின் தரைத்தளப் பகுதியில் தங்குவது வழக்கம். எனது சகோதரி அம்பிகா நாயரும் அதே தரைத்தளப் பகுதியில் தங்கியிருந்து, தரைத்தளத்தில் உள்ள எனது பகுதிக்கு வந்து சென்று கொண்டிருந்தார். தொழிலாளர்களின் சம்பளம், மின்சாரக் கட்டணம், சொத்துவரி, குடிநீர் மற்றும் கழிவுநீர்க் கட்டணம், தோட்டம் பராமரிப்புப் பொருட்களுக்கான கட்டணம் உள்ளிட்டவற்றைச் செலுத்துவதற்காக, கையொப்பமிட்ட 5 அல்லது 6 காலிக் காசோலைகளை(பிளாங்க் செக்) எனது அறையில் வைப்பது வழக்கம்.

எனது சகோதரி அம்பிகா நாயரும், சகோதரர் மல்லிகார்ஜுனா குஞ்சன் நாயரும் நான் கையொப்பமிட்ட காசோலைகளைத் திருடி, அதனை பணமாக்குவதற்காக வங்கியில் தாக்கல் செய்துள்ளனர். இது முற்றிலும் சட்டவிரோதமானதாகும்" என நடிகை



ராதா புகார் மனுவில் தெரிவித்துள்ளார். இந்த புகார் தொடர்பான விசாரணை நடைபெற்று வருவதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த நிலையில், ராதாவின் புகார்களுக்கு மறுப்பு தெரிவிக்கும் வகையில் அம்பிகா இன்று செய்தியாளர்களிடம் பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது;–

"ராதா தொடர்ந்த வழக்கு குறித்து செய்திகளில் ரூ.43 கோடி, ரூ.46 கோடி என ஒவ்வொரு முறையும் வெவ்வேறு தொகையை அதிகரித்துக் கொண்டே செல்கின்றனர். ராதா எனக்கு எனக்கு காசோலை வழங்கியது உண்மை. அந்த காசோலையை அவரே நிறுத்தி வைத்தார் என்பதும் உண்மை. ஆனால் அதற்கான காரணத்தை ராதா ஏன் சொல்லவில்லை?

ஏ.ஆர்.எஸ். கார்டன்ஸ் நிறுவனம் எனது குழந்தை போன்றது. அதற்கு பெயர் வைத்தவர் முன்னாள் முதல்–அமைச்சர் எம்.ஜி.ஆர்.தான். நான் சில நாட்களுக்கு முன்பு அங்கு சென்று பார்த்தபோது, ஏ.ஆர்.எஸ். கார்டன்ஸ் என்ற பெயர் இல்லாமல் வேறு பெயர் இருந்தது. நான் கலங்கிப் போய்விட்டேன்.

அந்த நிறுவனத்தில் பங்கு விவகாரம் தொடர்பான நீண்ட நாட்களாக பிரச்சினை போய்க்கொண்டிருக்கிறது. ஏ.ஆர்.எஸ். என்ற பெயரில் தயாரிப்பு நிறுவனம் ஒன்று உள்ளது. அதில் எனக்கு பங்கு இருக்கிறது. அதைப் பற்றி பேசுவதற்கும் ராதா தயாராக இல்லை. தங்கம்தான் ராதாவின் பலவீனம். தங்கத்தைப் பார்த்தால் ராதா ஒரு மாதிரி ஆகிவிடுவார். என்னுடைய தங்கம் நிறைய அவரிடம் உள்ளது. அது பற்றியும் எந்த பதிலும் இல்லை.

வீட்டில் இரவில் தூங்கும்போது தனது கைப்பையை பூட்டி நம்பர் லாக் போடும் அளவுக்கு கவனமாக இருக்கக் கூடியவர் ராதா. அப்படி இருக்கும்போது கையெழுத்து போட்ட காசோலையை வீட்டில் வைத்திருந்ததாக அவர் கூறுவது ஏற்றுக்கொள்ளும்படியாக இருக்கிறதா?

எனது சகோதரி ராதா காசோலை மோசடி வழக்கு தொடர்ந்தது வேதனையாக இருக்கிறது. அவர் செல்போனில் அழைத்தபோது நான் எடுக்கவில்லை என்று சொல்கிறார். அவரது மகளின் திருமணத்தில் முன்னாள் நின்று வேலை செய்து கொண்டிருந்தேன். அவர் செல்போனில் அழைத்தால் நான் ஏன் எடுக்காமல் இருக்க வேண்டும்?

வீட்டு விஷயத்தை வீட்டுக்குள்ளேயே வைத்து முடிக்கலாம் என்று நினைத்தேன். ராதா எனக்கு கொடுக்க வேண்டிய பணத்திற்காக தான் 3 காசோலைகளை கொடுத்தார்."

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## தமிழகத்தில் அரசு அலுவலகங்களில் லஞ்ச ஒழிப்புத்துறை சோதனை!




சென்னை, செப். 23–

தமிழகத்தில் அரசு அலுவலகங்களில் லஞ்ச ஒழிப்புத்துறை நடத்திய சோதனையில் ரூ. 1.73 கோடி பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் தவெக அரசு அமைந்தது முதல் அரசின் பல்வேறு துறை அலுவலகங்களில் லஞ்ச ஒழிப்புத்துறை அவ்வப்போது அதிரடி சோதனைகளை நடத்தி வருகிறது. இந்த சோதனையில் கோடிக்கணக்கில் லஞ்சப்பணம் பறிமுதல் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில், தமிழகம் முழுவதும் மாநகராட்சி, நகராட்சி, குடிநீர் வடிகால் வாரியம், வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகங்கள் என 36 அரசு அலுவலகங்களில் லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் நேற்று அதிரடி சோதனை நடத்தினர். இந்த அதிரடி சோதனையில் கணக்கில் வராத ரூ. 1.73 கோடி பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, 36 அரசு அலுவலகங்களில் நடந்த சோதனையில் கணக்கில் வராத ரூ. 13 லட்சம் ரொக்கப்பணம், ஜிபே மூலம் பெறப்பட்ட ரூ.1.59 கோடி என மொத்தம் 1 கோடியே 73 லட்சத்து 48 ஆயிரத்து 666 ரூபாய் லஞ்சம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

## 'டாஸ்மாக்' கடைகளில் மதுபான விலை உயர்வு?

சென்னை, செப். 23–

தமிழக அரசின் டாஸ்மாக் மதுக்கடைகளில், மது பாட்டில் விலை, அக்டோபர் முதல் வாரத்தில் இருந்து, 10 ரூபாய் உயர்த்தப்பட உள்ளது. தமிழகத்தில், சில்லரை கடைகள் வாயிலாக, மது வகைகள் விற்பனை செய்யும் பணியில், தமிழக அரசின் டாஸ்மாக் நிறுவனம் மட்டுமே ஈடுபட்டுள்ளது. காலி மது பாட்டில்களை மறுசுழற்சி செய்வதில் ஏற்படும் பிரச்னைக்கு தீர்வு காண, மது பாட்டிலுக்கு, 20 ரூபாய்க்கு மிகாமல் சுற்றுச்சூழல் மற்றும் சமூக நலத்தீர்வையை அரசு விதிக்க உள்ளது. இதற்காக மதிப்பு கூட்டு வரி சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டது. அதன்படி, அடுத்த மாதம், முதல் வாரத்தில் இருந்து மது வகைகள் பாட்டிலுக்கு 10 ரூபாய் உயர்த்தப்பட உள்ளன. இது தொடர்பாக டாஸ்மாக் அதிகாரி ஒருவர் கூறியதாவது: மதுக்கடைகளில், மது பாட்டில் விற்கப்படும் போது அதிகபட்ச சில்லரை விலையுடன் சேர்த்து 10 ரூபாய் கூடுதலாக வசூலிக்கப்படுகிறது. காலி பாட்டிலை திரும்ப ஒப்படைத்ததும், அந்த 10 ரூபாய் திரும்ப வழங்கப்படும். புதிய தீர்வையால் 20 ரூபாய் வரை மது பாட்டில் விலையை உயர்த்தலாம். இருப்பினும், 10 ரூபாய் உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த விலை உயர்வுக்கு பின், மது பாட்டில் விலையுடன், கூடுதல் பணம் வசூலிக்க வாய்ப்பு ஏற்படாது. மதுராந்தகம், திருப்பூர் இடைத்தே ர்தல் முடிந்ததும், இந்த விலை உயர்வு அமல்படுத்தப்படும். இவ்வாறு அவர் கூறினார்.




இஸ்மாயில் லக்கி டூராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881





# வேலை வாய்ப்பு

## கரூர் மாவட்ட சுகாதாரச் சங்கத்தில் 53 பேருக்கு வேலை!

கரூர் மாவட்ட சுகாதாரச் சங்கத்தில் காலியாக உள்ள 53 பணியிடங்கள் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்பட உள்ளன. இதற்குத் தகுதியுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

பணிகள்: செவிலியர், நகர்ப்புற சுகாதாரச் செவிலியர், ஆய்வக நுட்புநர், பல்நோக்கு மருத்துவமனைப் பணியாளர், மருந்து வழங்குநர், பெண் சிகிச்சை உதவியாளர், செயல்முறைச் சிகிச்சையாளர், மருத்துவ அலுவலர், செவித்திறன் பரிசோதகர் மற்றும் கதிரியக்கப் படப்பிடிப்பு நுட்புநர்.

மொத்த காலியிடங்கள்: 53.

பணி நியமனம்: ஒப்பந்த அடிப்படை.

பணியிடம்: கரூர்.

விண்ணப்பிக்கும் முறை: அச்சு வடிவிலான விண்ணபத்தைப் பூர்த்தி செய்து, அதிகாரப்பூர்வ அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளின்படி சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பம் பெறத் தொடங்கிய நாள்: 08.09.2026.

விண்ணப்பிக்கக் கடைசி நாள்: 26.09.2026.

கல்வித்தகுதி, வயது வரம்பு, ஊதியம், தேர்வு முறை மற்றும் விண்ணப்பம் சமர்ப்பிக்கும் முகவரி உள்ளிட்ட விவரங்களுக்கு கரூர் மாவட்ட அதிகாரப்பூர்வ இணையதளத்தில் உள்ள வேலைவாய்ப்பு அறிவிப்பைப் பார்க்கவும்.

## தமிழ்நாடு வனத் தீ கட்டுப்பாட்டு மையத்தில் 09 பணியிடங்கள்!

தமிழ்நாடு மாநில வனத் தீ கட்டுப்பாட்டு மையத்தில், ஒப்பந்த அடிப்படையில் 09 காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பு எண்: 01/2026 வெளியிடப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப உதவியாளர் (வரைகலை வடிவமைப்பாளர்), வலையமைப்பு மற்றும் தகவல் தொடர்பு நுட்புநர், கம்பியில்லாத் தொடர்பு இயக்குநர், புவியியல் தகவல் அமைப்பு நிபுணர், கணினி அமைப்புப் பகுப்பாய்வாளர் / தகவல் தொழில்நுட்ப மேலாளர் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர் (புவியியல் தகவல் அமைப்பு) ஆகிய பணிகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| விவரம் | தகவல் |
|---|---|
| நிறுவனம் | தமிழ்நாடு மாநில வனத் தீ கட்டுப்பாட்டு மையம் |
| அறிவிப்பு எண் | 01/2026 |
| வேலை வகை | தமிழ்நாடு அரசு வேலைவாய்ப்பு |
| பணி நியமனம் | ஒப்பந்த அடிப்படை |
| மொத்த காலிப் பணியிடங்கள் | 09 |
| பணியிடம் | தமிழ்நாடு |
| விண்ணப்பிக்கத் தொடங்கும் நாள் | 16.09.2026 |
| விண்ணப்பிக்கக் கடைசி நாள் | 26.09.2026 |

கல்வித்தகுதி, வயது வரம்பு, தேர்வு முறை மற்றும் விண்ணப்பிக்கும் வழிமுறை உள்ளிட்ட விவரங்களுக்கு அதிகாரப்பூர்வ அறிவிப்பைப் பார்க்கவும்.

## தூத்துக்குடி மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகில் வேலைவாய்ப்பு!

தூத்துக்குடி மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகில் ஒப்பந்த அடிப்படையில் 03 காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கான வேலைவாய்ப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

உதவியாளர் அமர்வு எழுத்தர், இளநிலை உதவியாளர் பதிவறை எழுத்தர் மற்றும் அலுவலக உதவியாளர் ஆகிய பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. தேர்வு செய்யப்படுவோர் தூத்துக்குடியில் பணியமர்த்தப்படுவர்.

இப்பணியிடங்களுக்கு நேரடி விண்ணப்ப முறையில் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பப் பதிவு 15.09.2026 அன்று தொடங்குகிறது. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க 29.09.2026 கடைசி நாளாகும்.

கல்வித்தகுதி, வயது வரம்பு, விண்ணப்பப் படிவம் மற்றும் விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி உள்ளிட்ட விவரங்களை தூத்துக்குடி மாவட்டத்தின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் https://Thoothukudi.nic.in/ உள்ள அறிவிப்பைப் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம்.

## இந்தியா ஆப்டெல் நிறுவனத்தில் 98 திட்டத் தொழில்நுட்பப் பணியிடங்கள்!

இந்தியா ஆப்டெல் நிறுவனத்தில் ஒப்பந்த அடிப்படையில் 98 திட்டத் தொழில்நுட்பப் பணியாளர் பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இப்பணியிடங்களுக்குத் தகுதியுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

அறிவிப்பு எண்: IOLHqrs/100(6)/2026–Rectt.

பணி: திட்டத் தொழில்நுட்பப் பணியாளர்.

மொத்த காலியிடங்கள்: 98.

வேலை வகை: மத்திய அரசு வேலைவாய்ப்பு.

பணி நியமனம்: ஒப்பந்த அடிப்படை.

பணியிடம்: டேராடூன்.

விண்ணப்பிக்கும் முறை: அச்சு வடிவிலான விண்ணபத்தைப் பூர்த்தி செய்து, அதிகாரப்பூர்வ அறிவிப்பில் https://indiaoptel.in/ குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளின்படி சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பம் பெறத் தொடங்கிய நாள்: 12.09.2026.

விண்ணப்பிக்கக் கடைசி நாள்: 03.10.2026.

கல்வித்தகுதி, வயது வரம்பு, ஊதியம், தேர்வு முறை மற்றும் விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி உள்ளிட்ட விவரங்களுக்கு இந்தியா ஆப்டெல் நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் உள்ள வேலைவாய்ப்பு அறிவிப்பைப் பார்க்கவும்.

## இந்தியா ஆப்டெல் நிறுவனத்தில் 57 பொறியாளர் பணியிடங்கள்!

மத்திய அரசு நிறுவனமான இந்தியா ஆப்டெல் நிறுவனத்தில் 57 இளநிலை திட்டப் பொறியாளர் பணியிடங்கள் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்பட உள்ளன. பணியிடம்: டேராடூன். அறிவிப்பு எண்: IOLHqrs/100(6)/2026–Rectt. அச்சு வடிவிலான விண்ணப்பங்களை 15.09.2026 முதல் 03.10.2026 வரை அறிவிப்பில் உள்ள வழிமுறைகளின்படி சமர்ப்பிக்க வேண்டும்.

கல்வித்தகுதி, ஊதியம், தேர்வு முறை மற்றும் விண்ணப்ப விவரங்களுக்கு அதிகாரப்பூர்வ இணையதளத்தை https://indiaoptel.in/ பார்க்கவும்.

## இன்றைய கார்ட்டூன்




# வீரமணி வழக்கு: யாரும் தப்பிக்க முடியாது – அமைச்சர் ராஜ்மோகன்!

சென்னை, செப். 23–

வீரமணி பாலியல் வழக்கு முதல்வரின் தீவிர தனிக் கண்காணிப்பில் இருப்பதாகவும், இதில் யாரும் தப்பிக்க முடியாது என்றும் அமைச்சர் ராஜ்மோகன் தெரிவித்தார்.



செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த ஆட்சியில் விசாரணை தாமதமானது ஏன் என்றும், வழக்கை முடிக்க அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டவர் யார் என்றும் கேள்வி எழுப்பினார். அதிகாரம் மற்றும் அரசியல் செல்வாக்கு கொண்டவர்களின் தொடர்புகள் குறித்தும் விசாரணை நடைபெறுவதாகக் கூறினார்.

தங்கள் அரசு பொறுப்பேற்ற குறுகிய காலத்திலேயே விசாரணையை முன்னெடுத்துள்ளதாகவும், ஒவ்வொருவரின் அடிப்படை உரிமைகளையும் பாதுகாக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

மேலும், கம்யூனிஸ்ட் கட்சியுடனான தமிழக வெற்றிக்கழகத்தின் கூட்டணி உறுதியாக இருப்பதாகத் தெரிவித்தார். இரு தரப்பினரும் இணக்கமாகச் செயல்படுவதாகவும், மூத்த கம்யூனிஸ்ட் தலைவர்கள் தங்களுக்கு வழிகாட்டுவதாகவும் கூறினார்.

வீரமணி வழக்கில் முந்தைய ஆட்சியாளர்கள் யாரைக் காப்பாற்ற முயன்றனர் என்றும் அவர் கேள்வி எழுப்பினார். இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பான எதிர்த்தரப்பின் விளக்கம் வழங்கப்பட்ட செய்தியில் இடம்பெறவில்லை.

# ஒலியை விட 5 மடங்கு வேகமாக செல்லும் ஹைப்பர்சோனிக் ஏவுகணை - வடகொரியா வெற்றிகரமாக சோதனை!

பியாங்யாங், செப். 23–

அமெரிக்கா மற்றும் தென்கொரியாவின் கடுமையான பொருளாதாரத் தடைகளையும் மீறி, வடகொரியா தொடர்ந்து அதிநவீன அணு ஆயுத சோதனைகளை நடத்தி உலக நாடுகளை நடுங்க வைத்து வருகிறது. அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் சமீபத்தில் பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்த போதிலும், வடகொரியா தனது பிடிவாதத்தை கைவிடாமல் புதிய ஏவுகணை சோதனையில் குதித்துள்ளது. வடகொரிய அதிபர் கிம் ஜாங் அன் தனது மகளுடன் நேரில் சென்று இந்த ஏவுகணை சோதனையை பார்வையிட்டார். ஒலியின் வேகத்தை விட 5 மடங்கு வேகமாக சென்று இலக்கைத் தாக்கும் 'ஹவாசாங்–11 மா' என்ற புதிய ஹைப்பர்சோனிக் ஏவுகணை வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது.



இந்த வியூகம் எதிரி நாடுகளுக்கு 'குணப்படுத்த முடியாத தீராத தலைவலியை' கொடுக்கும் என்று கிம் ஜாங் அன் மிரட்டல் விடுத்துள்ளார். கிழக்கு கடற்கரைப் பகுதியில் இருந்து ஏவப்பட்ட இந்த ஏவுகணைகள் சுமார் 600 கி.மீ தூரம் கடலில் பாய்ந்து விழுந்ததாக தென்கொரிய ராணுவம் உறுதி செய்துள்ளது.

# ஏழு மாவட்டங்களில் அடிக்கல்லுடன் முடங்கிய மினி டைடல் பார்க் திட்டங்கள்!

சென்னை, செப். 23–

திருநெல்வேலி, விருதுநகர் உள்ளிட்ட ஏழு மாவட்டங்களில், மினி டைடல் பார்க் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி பல மாதங்களாகியும் கட்டுமானப் பணிகள் தொடங்கவில்லை. இதனால், திட்டங்கள் செயல்படுத்தப்படுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

மாநிலம் முழுவதும் தகவல் தொழில்நுட்ப வேலைவாய்ப்புகளை உருவாக்க, இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில், 50,000 முதல் ஒரு லட்சம் சதுர அடி பரப்பில் மினி டைடல் பார்க் அமைக்க அரசு திட்டமிட்டது. நடப்பாண்டில் ஏழு மாவட்டங்களில் அடிக்கல் நாட்டப்பட்ட நிலையில், ஆட்சி மாற்றத்துக்குப் பின்னரும் பணிகள் தொடங்காமல் உள்ளன.

**மினி டைடல் பார்க்குகள்**

| இடம் | மாவட்டம் | மதிப்பீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|
| நாகர்கோவில் | கன்னியாகுமரி | 38.83 |
| பாளையங்கோட்டை | திருநெல்வேலி | 39 |
| விருதுநகர் | விருதுநகர் | 38.72 |
| கங்காபுரம் | ஈரோடு | 39.87 |
| இனாம் | கரூர் | 38.50 |
| நத்தம்பண்ணை | புதுக்கோட்டை | 36.78 |
| நாகை | நாகப்பட்டினம் | 43.78 |

இதற்கிடையே, கர்நாடக தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் முதலீடுகளை ஈர்க்க, ஓசூரில் ரூ.400 கோடியில், ஐந்து லட்சம் சதுர அடியில் டைடல் பார்க் அமைக்க கடந்த ஆட்சியில் டெண்டர் கோரப்பட்டது. தேர்வான நிறுவனத்துக்கு இதுவரை பணி ஆணை வழங்கப்படவில்லை.

# சவுதி சொன்ன நல்ல செய்தி!

சவுதி, செப். 23–

ஹவுதி தாக்குதலால் சேதமடைந்த சவுதி அரேபியாவின் கிழக்குமேற்கு எண்ணெய் குழாய் சீரமைக்கப்பட்டு, செயல்பாடுகள் மீண்டும் தொடங்கியுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இதனால், தினமும் சுமார் 40 லட்சம் பேரல் கச்சா எண்ணெய் விநியோகம் மீண்டும் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. யான்பு துறைமுகம் வழியாக ஏற்றுமதி விரைவில் தொடங்க வாய்ப்புள்ள நிலையில், பிரெண்ட் கச்சா எண்ணெய் விலை பேரலுக்கு 2 டாலர் குறைந்து 99.84 டாலராகியுள்ளதாகச் செய்தி தெரிவிக்கிறது.



# புயல் எச்சரிக்கை: தூத்துக்குடியில் 2-வது நாளாக விசைப்படகு மீனவர்கள் கடலுக்கு செல்லவில்லை!

தூத்துக்குடி, செப். 23–

வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வு மண்டலம் வலுவடைந்துள்ளதை அடுத்து, தூத்துக்குடி வ.உ.சி. துறைமுகத்தில் 1–ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது. மேலும் பாதுகாப்பு கருதி விசைப்படகு மீனவர்கள் இன்று 2–வது நாளாக கடலுக்கு செல்லவில்லை.



மத்திய மேற்கு மற்றும் அதனை ஒட்டிய மத்திய கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி, மேற்கு–வடமேற்கு திசையில் நகர்ந்து காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடைந்துள்ளது. இது மேலும் மேற்கு–வடமேற்கு திசையில் நகர்ந்து ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக நிலவும். தொடர்ந்து நகர்ந்து (புதன்கிழமை) இரவு அல்லது (வியாழக்கிழமை) அதிகாலையில் விசாகப்பட்டினம் மற்றும் கோபால்பூர் இடையே கரையை கடக்கக்கூடும் என வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது.

இதன் காரணமாக தமிழகத்தில் பல்வேறு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் மிதமான மழை பெய்யக்கூடும். தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் சூறாவளிக் காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோமீட்டர் வேகத்திலும், இடையிடையே 60 கிலோமீட்டர் வேகத்திலும் வீசக்கூடும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

வங்கக்கடலில் புயல் சின்னம் உருவாகியுள்ளதை அடுத்து, தூத்துக்குடி வ.உ.சி. துறைமுகத்திற்கு வரும் கப்பல்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்படும் வகையில் 1–ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.

கடலில் பலத்த சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்பதால் தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் கடலுக்குச் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாகத் தூத்துக்குடி மீன்பிடி துறைமுகத்தைச் சேர்ந்த விசைப்படகுகள் இன்று 2–வது நாளாக கடலுக்கு செல்லாமல் துறைமுகத்திலேயே பாதுகாப்பாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

# வங்கிகள் 3 நாட்கள் நாடு தழுவிய வேலைநிறுத்தம்!

புதுடில்லி, செப். 23–

வங்கிகளின் வேலை நாட்களை வாரத்துக்கு ஐந்து நாட்களாக குறைப்பது உட்பட பல் வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி வரும் 26ம் தேதி முதல் 3 நாட்கள் நாடு தழுவிய வேலைநிறுத்த போராட்டத்துக்கு வங்கி சங்கங்களின் கூட்டமைப்பான. யு.எப்.பி.யு., அழைப்பு விடுத்து உள்ளது. வங்கி தொழிலாளர்களின் கோரிக்கைகள் குறித்து, மத்திய தொழிலாளர் ஆணையர் முன்னிலையில், நேற்று நடந்த சமரச பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டப்படாததை அடுத்து வேலை நிறுத்த போராட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக, அமைச்சகம் மற்றும் இந்திய வங்கிகள் சங்கம் ஆகியவை வேலைநிறுத்தத்தைக் கைவிடும்படி கோரிக்கை விடுத்தன.



அதற்குப் பதிலளித்த தொழிற்சங்கங்கள், ஐந்து நாள் வங்கிப்பணி கோரிக்கை குறித்து அரசு சாதகமான முடிவு அறிவித்தால் மட்டுமே போராட்டத்தை விடுவது பற்றி பரிசீலிக்கப்படும் வட்டமாக தெரிவித்தது.

வரும் 28க்கு முன் வார இறுதி விடுமுறை வருவதால் இந்த போராட்டத்தால் தொடர்ந்து ஐந்து நாட்கள் வங்கிச் சேவைகள் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

மேலும், வரும் 30 ம் தேதி அரையாண்டு கணக்கு முடிக்கும் நாள் என்பதால், பணப்பரிவர்த்தனை மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் பெருமளவில் முடங்கும்.

ஓய்வூதியம் புதுப்பித்தல், பழைய ஓய்வூகிய திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் ஆகியவையும் சங்கங்களின் முக்கிய கோரிக்கைகளாக உள்ளன. வேலைநிறுத்தம் நடந்தால் வாடிக்கையாளர்கள் டிஜிட்டல் மற்றும் ஏ.டி.எம். சேவைகளை பயன்படுத்துமாறு வங்கிகள் அறிவுறுத்தியுள்ளன.

# பிறப்புச் சான்றிதழில் உள்ளது போன்று மாணவர்களின் பெயரை பதிவேற்ற வேண்டும்! அரசு தேர்வுகள் துறை!

சென்னை, செப். 23–

பொதுத்தேர்வுக்கான பெயர் பதிவையொட்டி பிறப்புச் சான்றிதழில் உள்ளது போன்று மாணவர்களின் பெயரைப் பதிவேற்ற வேண்டும் என்று அரசுதேர்வுகள் துறை தெரிவித்துள்ளது.

நடப்பு கல்வியாண்டுக்கான பொதுத்தேர்வு வருகிற 2027 மார்ச் – ஏப்ரல் மாதங்களில் நடைபெற உள்ள நிலையில் மதிப்பெண் சான்றிதழில் பெயர்களை சரியாக பதிவேற்றம் செய்யும்பொருட்டு அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கும் அரசு தேர்வுகள் துறை இயக்குநர் சுற்றறிக்கை அனுப்பியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.



அதன்படி பொதுத்தேர்வையொட்டி மாணவர்கள் பெயர்கள், அவர்களது பிறப்புச் சான்றிதழில் உள்ளது போன்று பதிவேற்றம் செய்ய வேண்டும்.

பெயருக்கும், இனிஷியலுக்கும் இடையே புள்ளி கூடாது. விவரங்களில் தவறு ஏற்பட்டால் வகுப்பு ஆசிரியர், தலைமை ஆசிரியரே பொறுப்பு என்றும் அதில் கூறப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# போரூர் - வடபழனி மெட்ரோ ரயில் சேவை! யாருக்காகக் காத்திருக்கிறது?

சென்னை, செப். 23–

சென்னை மெட்ரோ– ரயில் திட்டத்தின் இரண்டாம் கட்ட வழித்தடத்தில் அமைந்துள்ள போரூர் – வடபழனி மெட்ரோ ரயில் வழித்தடத்தில் ரயில்களை இயக்க அனுமதி கிடைத்தும் ஏழு மாதங்களுக்கு மேலாக சேவை துவக்கப்படாமல் காத்திருக்கிறது.



பிரதமர் நரேந்திர மோடி கொடியசைத்துத் தொடக்கி வைக்கும் விழாவுக்கு தேதி கேட்டு மெட்ரோ ரயில் சேவை காத்திருப்பதாகவும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளில் முதலாவதாக 14.64 கிலோ மீட்டர் தொலைவுக்கு போரூர்– வடபழனி வழித்தடத்தில் பணிகள் நிறைவடைந்து ரயில் இயக்கத்துக்கு ரயில்வே பாதுகாப்பு ஆணையத்தின் அனுமதியும் பெறப்பட்டுவிட்டது.

பணிகள் நிறைவடைந்து அனுமதியும் கிடைத்த பிறகும், சுமார் ஏழு மாதங்களாக சேவை தொடங்கப்படாமல் கிடப்பில் வைக்கப்பட்டிருப்பது, அப்பகுதியில் நாள்தோறும் போக்குவரத்து நெரிசலில் சிக்கும் மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது.

செப்டம்பர் இறுதிக்குள், இந்த வழித்தடத்தில் சேவை தொடங்கப்படும் என மெட்ரோ ரயில் நிர்வாக அதிகாரிகள் தெரிவித்திருந்தனர். ஆனால், இன்று வரை அது குறித்த அடுத்தக்கட்ட தகவல் எதுவும் வெளிவராதது பல்வேறு கேள்விகளை எழுப்பியிருக்கிறது.

அதாவது, பிற நகரங்களில் பிரதமர் மோடி தலைமையில் ரயில் சேவைகள் தொடக்கும் விழாவின்போதுதான் இது தொடங்கப்படுமா? அல்லது, பிரதமர் நரேந்திர மோடி, தமிழகத்தில் நடைபெறும் ஏதேனும் நிகழ்ச்சியில் பங்கேற்கும்போது இந்த சேவை தொடங்கப்படுவதற்காக காத்திருக்கிறதா என்பதே அந்த கேள்விகள்.

சென்னையில் இரண்டாம் கட்டத் திட்டத்தில் மொத்தம் 128 நிலையங்கள் அமைகின்றன. இதில் சுமார் 43 கி.மீ. சுரங்கப் பாதையாகவும், 75 கி.மீ. உயர்மட்டப் பாதையாகவும் அமைக்கப்படுகிறது.

இதில், முதல் பணியாக, வடபழனி முதல் பூந்தமல்லி நெடுஞ்சாலை வரையிலான 14.6 கி.மீ. மஞ்சள் வழித்தடம் 14 நிலையங்களுடன் அமைக்கப்பட்டுவிட்டது. அந்தப் பாதையில் ரயில்களை இயக்கலாம் என ரயில்வே பாதுகாப்பு ஆணையம் கடந்த பிப்ரவரியிலேயே அனுமதியும் வழங்கிவிட்டது.

அடுத்து, கலங்கரை விளக்கம் முதல் பூந்தமல்லி புறநகர் நெடுஞ்சாலை வரையிலான 26 கி.மீ. தொலைவு மெட்ரோ ரயில் பணிகள் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

# ஆசிய விளையாட்டு: ஸ்கீட் துப்பாக்கி சுடுதலில் இந்தியாவுக்கு வெண்கலம்!

புதுடெல்லி, செப். 23–

ஆசிய விளையாட்டு போட்டியின் ஸ்கீட் துப்பாக்கி சுடுதலில் இந்திய மகளிர் அணியினர் வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளனர்.

ஜப்பானின் நாகோயாவில் 20–ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இந்தியாவைச் சேர்ந்த வீரர், வீராங்கனைகள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றனர்.



இந்த தொடரில் இந்தியா, ஜப்பான், சீனா, தென்கொரியா, தாய்லாந்து உள்பட 45 நாடுகளைச் சேர்ந்த சுமார் 11,000 வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர்.

இந்த நிலையில், மகளிர் ஸ்கீட் துப்பாக்கி சுடுதலில் இந்தியாவின் ரைசா தில்லன், மகேஸ்வரி சௌஹான் மற்றும் பரினாஸ் தலிவால் ஆகியோர் அடங்கிய அணியினர், 331 என்ற புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தைப் பிடித்து வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றினர்.

125 புள்ளிகளில் ரைசா மற்றும் பரினாஸ் இருவரும் தலா 111 புள்ளிகளையும், மகேஸ்வரி 109 புள்ளிகளையும் பெற்றனர்.

துப்பாக்கி சுடுதல் பிரிவில் இந்தியா தற்போது நான்கு வெள்ளி மற்றும் இரண்டு வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020